# பசு சாணம் மூலம் இயங்கும் விமானம்

## ஆஸ்திரேலிய என்ஜினீயர்கள் சாதனை

பசு சாணம் மூலம் இயங்கும் விமானத்தை ஆஸ் திரேலிய என்ஜினீயர் கள் சாதனை படைத்துள் ளனர். புதுவித விமானங்கள் வடிவமைப்பு (டிசைனிங்) போட்டி அமெரிக்காவில் உள்ள வாஷிங்டனில் நடந் தது. அதில் பல நாடு களைச் சேர்ந்த நிபுணர் கள் பங்கேற்று தங்கள் வடி வமைப்புகளை தாக்கல் செய்தனர். அதில், ஆஸ்திரேலியா வைச் சேர்ந்த என்ஜினீயரிங் மாணவர்கள் பசு சாணம் மூலம் இயங்கும் விமானத்தை வடிவமைத்து இருந்தனர். பெட்ரோலுக்கு பதிலாக மித்தேன் மூலம் இயங்கும் படி தயாரித்து இருந்தனர். விமானத்தில் என்ஜி னுக்கு அருகே பசு சாணம் கழிவு டேங்க் அமைக்கப் பட்டுள்ளது. அதில் இருந்து மீத்தேன் தயாராகி விமா னத்தை இயக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.



மேலும் பிரேசில் நாட்டைச் சேர்ந்தவர்கள் விமான பயணிகளின் உட லில் இருந்து வெளியாகும் வெப்பம் மூலம் இயங்கும் விமானத்தை வடிவமைத்து இருந்தனர். அதன் மூலம் பயணி களின் இருக்கையில் உணர்வு கருவிகள் பொருத் தப்பட்டிருக்கும். அவை உட லில் இருந்து வெளியாகும் வெப்பத்தை எடுத்து அதை மின் சாரமாக மாற்றி விமா னத்தை இயங்க செய்யும். இவை தவிர போட்டியில் ரீசார்ஜபிள் பேட்டரிகளின் மூலம் இயங்கும் விமானம் உள்பட 5 வகையில் வடி வமைக்கப்பட்டவை இறுதி போட்டிக்கு தேர்வு செய்யப் பட்டன. அவற்றில் பசு சாணம் மூலம் இயங்கும் விமானம் போட்டியில் வெற்றி பெற் றது. இதற்கு ரூ. 20 லட்சம் பரிசு தொகையும் வழங்கப்பட்டது.

Word.